MAY 2024 **P/ID 35326/PTL4S**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு 50 சொற்களில் விடையளிக்க.

1. பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படையின் தனிச்சிறப்பினை எழுதுக.

2. 'கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமையர்' என நக்கீரர் யாரைக் குறிப்பிடுகிறார்?

3. முல்லைப்பாட்டில், தலைவியைத் தோழி தேற்றும் நிலையினை எழுதுக.

4. முல்லைப்பாட்டு நாழிகைக் கணக்கர் குறித்துக் கூறுவது யாது?

5. பூக்களைப் பறித்துப் பாசறையில் குவிப்பது குறித்துக் 'குறிஞ்சிப்பாட்டு' கூறுவதனை எழுதுக.

6. 'புனல்பரந்து பொன் கொழிப்பது' எனப் பட்டினப்பாலை எதனைக் குறிப்பிடுகிறது?

7. பட்டினப்பாலையில் மகளிர் வெறியாடிய திறம் ஒன்றனை எழுதுக.

8. 'ஊர்க்கவின் அழிய' என எதனைப் 'பட்டினப்பாலை' குறிப்பிடுகிறது?

9. மதுரைக்காஞ்சி பாடிய மன்னனின் திறம் ஒன்றனை எழுதுக.

10. மதுரையில் உள்ள தெருக்களை மதுரைக்காஞ்சி எவ்வாறு குறிப்பிடுகிறது?

11. 'நெடுநல்வாடை' – பெயர்ச் சிறப்பினை எழுதுக.

12. அரசியின் அரண்மனையை எவ்வாறு வகுத்ததாக நெடுநல்வாடை குறிப்பிடுகிறது?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு 250 சொற்களில் விடையளிக்க.

13. அலைவாயில் ஆறுமுகன் அருளும் காட்சியினைத் திருமுருகாற்றுப்படையின் வழி விளக்குக.

14. இரு பிறப்பாளரின் இயல்பு குறித்து நக்கீரரின் கருத்துகளை எழுதுக.

15. பாசறையின் இயல்பினை 'முல்லைப்பாட்டு' எங்ஙனம் எடுத்துரைக்கிறது?

16. தலைவன் கடக்கும் வழியின் அருமையினைக் 'குறிஞ்சிப்பாட்டு' எங்ஙனம் விளக்குகிறது?

17. பட்டினப்பாலையில் கொடிபறக்கும் குறியீட்டு நிலை குறித்து எழுதுக.

18. ‘பரதவர் மகளிர் குரவையொடு ஒலிப்ப’ என மதுரைக்காஞ்சி குறிப்பிடுவதற்கான காரணத்தை எழுதுக.

19. நெடுநல்வாடையில் இடம்பெறும் மகளிர் வழிபாட்டு முறைகளை எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு 500 சொற்களில் விடையளிக்க.

20. குன்று தோறாடும் பெருமானின் பெருமைகளைத் திருமுருகாற்றுப்படை எங்ஙனம் விரித்துரைக்கிறது?

21. குறிஞ்சிப்பாட்டில் இடம்பெறும் களிறு தரு புணர்ச்சி குறித்து விளக்குக.

22. திருமாவளவனின் பெருமைகளைப் பட்டினப்பாலை எங்ஙனம் எடுத்துரைக்கிறது?

23. மதுரைக்காஞ்சி பாண்டியன் நெடுஞ்செழியனின் திறத்தை எங்ஙனம் புலப்படுத்துகிறது?

24. ‘நெடுநல்வாடை’ கூதிர்கால நிலைகளை எவ்வாறு பாடுகிறது? விரித்துரைக்க.

———————